சங்க இலக்கியங்களில் இயற்கையும், சுற்றுச்சூழலும்

து. சாந்தாலெட்சுமி
பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண் : 2422223012001
முதுகலை மற்றும் தமிழாய்வு மையம்
ஏ.பி.சி மகாலட்சுமி மகளிர் கல்லூரி, தூத்துக்குடி

முனைவர் அ. அமுதா
உதவிப் பேராசிரியர்
வ. உ. சிதம்பரம் கல்லூரி, தூத்துக்குடி
DOI: https://doi.org/10.5281/zenodo.19220539

முன்னுரை

காதலையும் வீரத்தையும் பறை சாற்றுகின்ற பண்டைய தமிழ் இலக்கியங்கள் சிறப்புப் பெற்றவை. தமிழர்கள் வாழ்வியலை பிரதிபளிக்கும் காலக் கண்ணாடியாக சங்க இலக்கியங்கள் திகழ்கின்றன. சங்க கால மக்கள் ஐந்திணை நில பகுப்பு முறையில் வாழ்ந்தனர். அவர்கள் இயற்கையோடு ஒன்றிய வாழ்வினை வாழ்ந்திருக்கிறார்கள் என்பதை சங்க இலக்கிய பாடல்கள் உணர்த்துகின்றன. சங்க இலக்கியங்களில் இயற்கை பாடல்கள் மிகுந்த அழகிய மற்றும் கவித்துவமான அமைப்புகளைக் கொண்டுள்ளன. அக்கால மக்களின் வாழ்க்கைமற்றும்அவர்களின்பண்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கும் வகையில் இயற்கையின் பண்புகளுடன் இணைத்து கவிதை படைத்துள்ளனர் சங்க புலவர்கள்.

சங்க இலக்கியத்தில் காணப்படும் இயற்கை பாடல்களில் கவிஞர்கள் இயற்கையின் அழகு, பருவங்கள், வானிலை, ஆறு, மலை, காலநிலை, மரங்கள், மலர்கள், விலங்குகள், புங்காற்று, பசுமை நிலம் போன்றவற்றை கவிதைகளாக உருவாக்கியுள்ளனர். அவை அவற்றின் பரிமாணத்தில் இயற்கையின் பெருமை மற்றும் அதன் மீதான அன்பை வெளிப் படுத்துகின்றன. சங்க இலக்கியங்களில் இயற்கையுடன் கூடிய சுற்றுச்சூழலை ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

குறிஞ்சி

மலையும் மலைசார்ந்த பகுதியும் குறிஞ்சி நிலமாகும். மலைப்பகுதியில் அமைந்த பசுமையான காடுகளும் மலர்களும், செடிகளும், ஆறுகளும், நீரூற்றுகளும் அங்குள்ள இயற்கை தருணங்களை காட்சிபடுத்து கின்றன. இப்பகுதியில் ஆற்றல் மிக்க மலைகளும், அங்குள்ள உயிரினங்களும், பருவ நிலைகளும் பிரதானமாக தோன்றுவதை சங்க இலக்கியங்கள் உணர்த்துகின்றன. கண்ணிற்கும் மனதிற்கும் விருந்தளிக்கக் கூடிய இயற்கை காட்சியை கண்முன் நிறுத்தும் குறிஞ்சித் திணை பாடல்.

ஆடுஅமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்
கோடை அவ்வளி குழலிசை ஆக
பாடுஇன் அருவிப் பனிநீர் இன்இசைத்
தோடுஅமை முழவின் துதைகுரல் ஆகக்
கணக்கலை இருக்கும் கருங்குரற் றுரம்பொடு
மலைப்புஞ் சாரல் வண்டியாழ் ஆக
இன்பல் இமிழ்இசை கேட்டுக் கலிசிறந்து
மந்தி நல்அவை மருள்வன நோக்கக்
கழைவளர் அடுக்கத்து இயலி ஆடுமயில்
(அகம் 82: 1-9)

இப்பாடலில் பசுமையான மலைப்பகுதி அங்கே, மயில்கள் தோகை விரித்து நடனம் ஆடிக் கொண்டிருக்கின்றன. மூங்கில் மரங்களை வண்டுகள் துளைத்துள்ளதால் அத்துளையின் வழியே காற்று புகுந்து ஒலி எழுகின்றது. அவ்வொலி குழலிசையாக ஒலிக்கின்றது. அருவியில் இருந்து வீழும் நீரின் ஓசை இனிய முழவின் ஒலியை ஒத்து இருக்கின்றது. மலைப்பகுதியில் விளையாடும் மான் இனங்கள் எழுப்பும் ஒலி பெருவங்கியத்தின் இசையாக விளங்குகின்றது. அங்கு பறந்து திரியும் வண்டுகள் எழுப்பும் ஒலி யாழிசையாக மயக்குகின்றது. இவற்றையெல்லாம் அக்காட்டிலுள்ள குரங்குகள் வியந்து பார்க்கின்ற காட்சியை கண்முன் நிறுத்துகின்றார் புலவர்.

முல்லை

காடும் காடு சார்ந்த இடமும் முல்லைத் திணை ஆகும். இத்திணை பசுமையான காடுகள் மற்றும் வனப்பகுதிகளைக் குறிக்கிறது. வனசமூகம், மெல்லிய காற்று, நீர்வீழ்ச்சி, மழைக்கால பருவங்கள் போன்ற இயற்கை கூறுகள் வருணிக்கப்படுகின்றன. இவை தலைவன் தலைவியின் மனோ பாவங்கள், ஏக்கம், சந்தோஷம், துன்பம் முதலியவற்றோடு புனைந்து கூறப்பட்டுள்ளது.

முல்லை வைந்நுனை தோன்ற இல்லமொடு
பைங்காற் கொன்றை மென்பிணி அவிழ
இரும்பு திரித்தன்ன மாஇரு மருப்பின்
பரலவல் அடைய இரலை தெறிப்ப
மலர்ந்த ஞாலம் புலம்புறக் கொடுப்ப
கருவி வானம் கதமுறை சிதறிக்
கார்செய் தன்றே கவின்பெறு கானம்

(அகம் 4: 1-7)

இப்பாடலில் கார்காலத்தில் முல்லை அரும்புகளும் கொன்றை மரத்தின் மொட்டுக்களும் தோன்றி மணம் வீசுகின்றது. இரும்பை முறுக்கி விட்டது போல பெரிய கருமையான கொம்புகளை உடைய ஆண்மான்கள் பரற்களையுடைய பள்ளங்களில் தேங்கியுள்ள மழைநீரில் துள்ளிக் குதித்து விளையாடுகின்றன என்று கார்காலத்தின் இயற்கை காட்சியை பாடல் மூலம் உணர்த்துகிறார் புலவர்.

கார்காலத்தில் போர் வினைமுடிந்து நாடு திரும்பும் தலைவன் வரும் வழியில் காந்தன் பூக்கள் புத்துக்கிடக்கின்றன. அப்புவின் மனம் தலைவியை நினைவு படுத்துகிறது. குதிரைப் புட்டிய தேரினை விரைவாக செலுத்தி வருகின்றான். வரும் வழியில் இருபக்கமும் உள்ள சோலைகளில் வண்டுகள் தன் துணையுடன் தேனை உண்டு மகிழ்ந்து இருப்பதைக் கண்டு தேரில் கட்டப்பட்டிருக்கும் மணிகளின் சத்தம் கேட்டு வண்டுகள் அஞ்சி விடக்கூடாது என மெதுவாக வந்தான் என்று இயற்கைச் சூழலை எடுத்துணர்த்தும் முல்லைத் திணைப் பாடல்.

புத்த பொங்கர்த் துணையொடு வதிந்த
தாதுண் பறவை பேதுறல் அஞ்சி
மணிநா ஆர்த்த மாண்வினைத் தேரன்
உவக்காண் தோன்றும் குறும் பொறை நாடன்
கறங்கிசை விழவின் உறந்தைக் குணாது
நெடும்பெருங் குன்றத்து அமன்ற காந்தட்
போதவிழ் அலரின் நாறும்
ஆய்தொடி அரிவை! நின் மாணலம்படர்ந்தே

(அகம் 4: 10-17)

மருதம்

வயலும் வயல் சார்ந்த இடமும் மருத நிலமாகும். இந்நில மக்களின் பொது வாழ்க்கை, ஊடல், கலாச்சாரம், விவசாயம் மற்றும் சமூக வாழ்க்கையை மூலமாக கொண்டு இயற்கையோடு இணைந்து படைக்கப்பட்டுள்ளது

உழவர்கள் நெற்கதிர்களை அறுவடை செய்தபின் வயல்களை மறுபடி உழுது, பனையோலைப் பெட்டிகளில் கொண்டு வந்த விதைகளை ஈரமுள்ள நிலத்தில் விதைத்து விட்டு காலியான பெட்டியில்

அங்குள்ள நீர் நிலைகளில் வாழும் மீன்களைப் பிடித்து சென்றனர் என்பதை நற்றிணைப் பாடல் உணர்த்துகிறது.

அரிகால் மாறிய அம்கண் அகல்வயல்
மறுகால் உழுத ஈ.ரச் செறுவின்
வித்தொடு சென்ற வட்டி பற்பல
மீனொடு பெயரும் யாணர் ஊர
(நற்றிணை 210: 1-4)

விளைச்சல் நீங்காத வயல்களில் கருமை நிறமுடைய முதிர்ந்த கரும்பின் சாற்றை ஆலைகளில் காய்ச்சும் பொழுது அங்குள்ள நெய்தல் மலர்கள் நெருப்பின் வெப்பத் தில் வாடுகின்றன. எருமை கன்றுகள் செந்நெல்லின் கதிரை தின்றுவிட்டு நிழலில் உறங்குகின்றன. தென்னை, வாழை, கமுகு, மஞ்சள், மா, பனை, சேம்பங்கிழங்கு, இஞ்சி போன்ற தாவரங்கள் மருத நிலத்தில் செழிப்பாக காணப்படுவதை பட்டினப் பாலை எடுத்துரைக்கிறது.

விளைவு அறா வியன் கழனி
முதல் சேம்பின் முளை இஞ்சி
(பட்டினப்பாலை 8-19)

நெய்தல்

கடலும் கடல் சார்ந்த இடமும் நெய்தல் நிலமாகும். கடல் சூழல், அதன் அழகு மற்றும் அச்சூழலில் உள்ள சமுதாயம், அந்த சமூதாயத்தின் வாழ்வு, கலாச்சாரம். மரங்கள், பறவைகள் விலங்குகள் போன்றவை விளக்கப்படுகின்றன. இவை அனைத்தும் நெய்தல் நில வாழ்க்கையை உணர்த்துகின்றன.

உப்பளங்களில்விளைவித்த வெண்ணிறக் கல் உப்பை உப்பு வணிகர்கள் தங்களது எருதுகள் புட்டிய வண்டியில் ஏற்றிச் சென்று, கோடைக் காலத்தின் வெப்பத்தால் பிளவுபட்ட பாறைக் குன்றைக் கடந்து தொலைவில் உள்ள ஊர்களில் விற்பனை செய்ததை அகநானூற்று பாடல் கூறுகிறது.

வெண்கல் உப்பின் கொள்ளை சாற்றி
என்றூழ் விடர கன்றம் போகும்
கதழ்கோல் உமணர் (அகம் 140: 3-5)

பாலை

மணலும் மணல் சார்ந்த இடமும் பாலை நிலமாகும். கடும் வெப்பம், நீரின்மை பசுமை இல்லா நில அமைப்பை உடையது, தலைவன் பிரிவு, தலைவியின் நிலை, காதல் வேட்கை, அச்சம் தரும் வழிப்பயணம், விலங்குகள், பறவைகள்போன்றவை பாலை நில அமைப்பை உணர்த்துகின்றன.

கொடிய பாலை நில வழியில் உலர்ந்த கிளைகளையுடைய ஓமை மரத்தை குத்திய உயர்ந்த கொம்பையுடைய ஆண்யானை கோடை வெப்ப மிகுதியால் மலையின் அடிவாரத்தில் நின்றுக் கொண்டு மேகம் முழங்குகின்ற கடுமையான ஒலியைக் கூர்ந்து கேட்டதாக குறுந்தொகைப் பாடல் கூறுகிறது.

கொல்லோ முளிசினை
ஓமைக் குத்திய உயர்கோட்டு ஒருத்தல்
வேனிற் குன்றத்து வெவ்வரைக் கவா அன்
மழைமுழங்கு கருங்குரல் ஓர்க்கும்
(குறுந்தொகை 396: 3-6)

காட்டாற்று வெள்ளம்

மழைப் பெய்ததால் காட்டாற்று வெள்ளப் பெருக்கு விரைந்தோடி வருகிறது. அந்நீரின் நிறம் மறையும்படி முதிர்ந்து உதிர்ந்த அழகிய நெருங்கிய மலர்கள் நிரம்பப் பெற்று வருகிறது. அந்நீரானது முதலைகள் தங்குகின்ற உயர்ந்த கற்பாறைகளில் மோதி மீளும் போது சுழி உண்டாகிறது. அச்சுழி மருவாத யானை தன் பிடியுடனும் கன்றுடனும் தழுவுதலைப் பெறாத களிற்றியானையின் மதம் கெட மோதி அழித்து அதனை வலிமையுடன் இழுக்கின்றது. அத்தகைய வெள்ளத்தில் பன்றிகள் அஞ்சாது கடந்த செல்கின்றன. இவ்வாறாக அச்சம் தரும் தோற்றத்தை உடையதாக காட்டாற்று வெள்ளம் வருவதை கண்முன் நிறுத்துகிறார் புலவர்.

நீர் நிறம் கரப்ப, ஊழுறுபு உதிர்ந்து
பூமலர் களுலிய கடு வரற் கான் யாற்று

கராஅம் துஞ்சும் கல் உயர் மறி சுழி
மராஅ யானை மதம் தப ஒற்றி
உராஅ ஈர்க்கும் உட்குவரு நீத்தம்
கடுங்கண் பன்றியின் நடுங்காது துணிந்து
(அகம் 18 :1-6)

என்ற பாடல் வரிகள் பதிவு செய்கின்றன

உலகம்

மண்ணாலாகிய இவ்வுலகத்திற்கு குனறுகள் பின்னிப் பிணைந்திருக்கின்ற தலைகளாகவும் கடலானது இவ்வுலகத் திற்கு ஆடையாகவும் திகழ்வதாக உலக இயற்கையைக் கூறும் பாடல்

குன்று தலைமணந்து குழூஉக் கடல் உடுத்த
மண்கெழு ஞாலம்
(பதிற்றுப்பத்து 4: 1- 2)

வானியல்

சூரியன் செல்லும் வழியும், அச்சூரியனது இயக்கமும் சூரிய இயக்கத்தால் சூழப்பட்ட நில மண்டிலமும் காற்றியங்கும் திசையும், ஓர் பிடிப்புமின்றி அந்தரத்திலே நிற்கும் ஆகாயம் என்று வானியல் இயற்கை நிகழ்வை கூறுகின்றது புறநானூற்றுப் பாடல்

செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப்
பரிப்பும் பரிப்புச் சூழ்ந்தமண் டிலமும்
வளி திரிதரு இசையும்
வறிது நிலைஇய காயமும்...
(புறம்.30:1-5)

மனித வாழ்வு

ஒருவனை ஒருவன் கொன்றழிப்பதும் ஒருவனிடம் ஒருவன் தோற்றோடிப் போவதும் உலகத்து இயற்கை என மனித வாழ்வியலின் உண்மையை எடுத்து ரைக்கிறது, இப்பாடல்,

ஒருவனை ஒருவன் அடுதலும்
தொலைதலும்
புதுவது அன்று இவ்வுலகத் தியற்கை
(புறம்76:1-2)

நிலவு

நீல நிற மணியின் வண்ணம் கொண்ட கரிய இருளானது அகலும்படி பிறை நிலாவின் இரு கோடுகளும் கூடும் போது முழு நிலவாகும். இம்முழு நிலவு இருளை அகற்றி ஒளியைத் தரும் என்று நிலவு பற்றி கூறப்பட்டுள்ள பாடல்.

மணி நிறமை இருள் அகல, நிலா விரிபு
கோடு கூடு மதியம் இயலுற்றாங்கு
(பதிற்றுப்பத்து 4: 11-12)

மலர்

விரிந்த வானம் மழை பொழிந்ததால் குளுமையுடன் மணக்கும் பிடவம், கொடிபடர்ந்து தவழும் தளவம், வண்ணம் காட்டும் தோன்றி, கொத்துக் கொத்தாக விளங்கும் கொன்றை போன்ற பல வகை மலர்கள் புத்திருக்கின்ற செய்தியை கலித்தொகை பாடல் கூறுகிறது.

கண் அகன் இருவிசும்பில் கதழ்பெயல் கலந்து ஏற்ற
தண்நறும் பிடவமும், தவழ்கொடித் தளவமும்,
வண்ண வண் தோன்றியும்
வயங்குஇணர்க் கொன்றையும்
அன்னவை பிறவும் பல்மலர்
(கலி 102: 1-4)

அடும்பின் கொடியில் வரிசையாக மலர்ந்திருக்கின்ற மலர்களை எல்லாம் வளைந்த காலையுடைய நாரைகள் மிதித்து கொண்டு மீனை உண்ணுகின்ற செய்திகள் குறுந்தொகையில் கூறப்பட்டுள்ளது.

அடும்பவிழ் அணிமலர் சிதை இமீன் அருந்தும்
தடந்தாள் நாரை ..
(குறுந்தொகை 349: 1-2)

சேற்றிலே வளரும் சிவந்த தாமரை மலரில் பொலிவுறத் தோன்றும் நூற்றுக்கணக்கான இதழ்களும் ஒரே மாதிரிச் சிறப்புடையனவாய் இருக்கின்ற இயற்கை அழகை எடுத்துரைக்கின்றது புறநானூற்றுப் பாடல்

சேற்று வளர் தாமரை பயந்த ஒண்கேழ்
நூற்றிதழ் அலரின் நிரை

(புறம் 27:1-2)

சிப்பி

முற்றிய நீண்ட சிப்பியில் முத்துக்கள் இருப்பதைச் கூறும் புறநானூற்றுப் பாடல் அரு

முதிர்வார் இப்பி முத்தவார்...

(புறம் 53-1)

கிளியின் செயல்

சிவந்த வாயை உடைய பச்சைக்கிளிகள். குன்றக்குறவர்கள் தங்கள் விளைநிலங்களில் உள்ள கதிர்களை அறுவடை செய்து விட்டதால் அவ்விடத்தை பிரிய மனமின்றி கதிர் இல்லாத இருவித் தட்டையில் அமர்ந்திருந்த செய்தி ஐங்குறுநூற்றில் கூறப்பட்டுள்ளது.

மேகங்கள் கடலிலிருந்து முகந்த நீரை மலை மேல் பொழிகிறது. மலையில் விழுந்த மழை நீர் ஆறுகளில் ஓடி கடலில் கலப்பதை பட்டினப்பாலை கூறுகிறது.

வான் முகந்த நீர் மலைப் பொழியவும்
மலைப் பொழிந்த நீர் கடல் பரப்பவும்

(பட்டினப்பாலை 126-127)

முடிவுரை

இயற்கையை நேசித்து இயற்கையோடு சேர்ந்த செம்மையான வாழ்வினை பழந்தமிழர்கள் வாழ்ந்திருப்பதை அறிய முடிகிறது. எனவே இயற்கை வளங்களை அழிக்காமலும், எதிர்கால சந்ததியினருக்கு ஆபத்தினை உருவாக்காமலும் இருக்க வேண்டியது ஒவ்வொருவரின் கடமையாகும். இயற்கையைப் பேணிக்காத்து வளம் பெறுவோம் இயற்கையை நேசிப்போம்.

துணைநூற்பட்டியல்

1. கு. வெ.பாலசுப்பிரமணியன் (உ.ஆ), நற்றிணை. நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004
2. கடியலூர் உருத்திரங்கண்ணனார், பட்டினப்பாலை, திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட், சென்னை. 1975
3. இரா. செயபால், அகநானூறு, நியு செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட், சென்னை, 2004
4. இராமரத்தினம் (உ.ஆ), குறுந்தொகை, கங்கை புத்தக நிலையம், சென்னை, 2002
5. புலியுர்க் கேசிகள், கலித்தொகை, ஸ்ரீ செண்பகா பதிப்பகம் 2010